செய்தி வெளியீடு எண்: 396 நாள் : 24.07.2013

தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் சென்னை மாவட்ட அரசுப் பணியாளர்களுக்கான 2013–14 ஆம் ஆண்டுக்கான ஆட்சிமொழி பயிலரங்கம், கருத்தரங்கம் 22.07.2013, 23.07.2013 ஆகிய இரு நாள்கள் சென்னை அரசு அருங்காட்சியக கலையரங்கில் நடைபெற்றது. 22.07.2013 ஆம் நாளன்று நடைபெற்ற ஆட்சிமொழிப் பயிலரங்கினை சென்னை மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி இரா.சீதாலெட்சுமி அவர்கள் தொடக்கி வைத்தும், தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் கா.மு.சேகர் அவர்கள் சிறப்புரையும், காவல் துறைத் தலைவர்(ஓய்வு) இரா.ஆறுமுகம்,இ.கா.ப அவர்கள் வாழ்த்துரையும் வழங்கினார்கள்.

அன்றைய நாளில் ஆட்சிமொழி வரலாறும், சட்டமும், அலுவலகக் குறிப்புகள், வரைவுகள் தயாரித்தல் செயல்முறை ஆணைகள் தயாரித்தல் ஆகிய தலைப்புகளில் தமிழ் வளர்ச்சித் துறை உதவி இயக்குநர்கள் பயிற்சியளித்தனர்.

23.07.2013 இரண்டாம் நாள் முற்பகல் நிகழ்வில் மொழிபெயர்ப்பு கலைச்சொல்லாக்கம், மொழிப்பயிற்சி, ஆட்சிமொழி ஆய்வு குறைகளைவு எனும் தலைப்புகளில் உதவி இயக்குநர்கள் உரை நிகழ்த்தினர்கள்.

பிற்பகல் ஆட்சிமொழிக் கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் சென்னை மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் முனைவர் சு.தம்புசாமி அவர்கள் கருத்தரங்கிற்கு வரவேற்புரை ஆற்றினார். தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் முனைவர் மூ. இராசாராம் அவர்கள் தம் தலைமையுரையில் அரசு அலுவலர்கள் ஆட்சிமொழித் திட்டத்தை சிறப்பாக நிறைவேற்ற உறுதுணை புரிய வலியுறுத்தினார். மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்துறை அரசு செயலாளர்கள் கூட்டத்தில் தமிழிலேயே பேசுமாறும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துறை வாரியான ஆய்வு மேற்கொண்ட போது காணொலி காட்சிகள் (பவர் பாய்ண்ட் பிரசன்டேசன்) அனைத்தும் தமிழிலேயே தயாரிக்கப்பட அறிவுறுத்தி அதேபோன்று காணொலி காட்சிகள் தமிழிலேயே நடத்தப்பட்டது எனக் கூறினார். அதனையடுத்து சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப. அவர்கள் முன்னிலை உரையாற்றினார். கருத்தரங்கத்தில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் கோ.விசயராகவன், பொதிகை தொலைக்காட்சி நிலைய உதவி இயக்குநர் முனைவர் பால.இரமணி , கலைப்பண்பாட்டுத் துணை இயக்குநர் இரா.குணசேகரன், மொழிபெயர்ப்புத் துறை இயக்குநர் திரு.ந.அருள் ஆகியோர் கருத்துரையாற்றினர். தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் கா.மு.சேகர் அவர்கள் ஆட்சிமொழித் திட்ட செயலாக்க விளக்கவுரையாற்றினார். அதனையடுத்து கருத்தரங்கில் வாழ்த்துரை வழங்கிப் பேசிய வணக்கத்திற்குரிய சென்னை மாநகரத் தந்தை சைதை துரைசாமி அவர்கள் அண்மையில் நடைபெற்ற அனைத்து நாட்டு மேயர்கள் மாநாட்டில் கலந்துகொண்ட சீனா, ஜப்பான், ரஷ்யா, ஸ்பெயின் போன்ற நாடுகளிலிருந்து வந்த மேயர்கள் அவரவர் தம் தாய்மொழியிலேயே உரையாற்றினார்கள் என்றும், தாம் பேச வரும்போது மொழிபெயர்ப்பாளர் இல்லை என ஆங்கிலத்தில் பேச வேண்டுமென குறிப்பெழுதி அளித்தனர் என்றும் இருந்தும் அம்மாநாட்டில் தாம் தமிழிலேயே பேசியதாகவும் தெரிவித்தார்.

நிறைவாக பள்ளிக்கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர்நலத் துறை அமைச்சர் முனைவர் வைகைசெல்வன் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தமிழ் வளர்ச்சித் துறை ஈராண்டு சாதனை விளக்கப் பதாகையை திறந்து வைத்து விழாப் பேருரையாற்றி ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தில் சிறந்து விளங்கிய சென்னை மாவட்டக் கல்வி (வடக்கு) அலுவலகத்திற்கு கேடயமும், சிறந்த வரைவுகள்/குறிப்புகள் எழுதிய அரசுப் பணியாளர்களுக்குப் பரிசுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கிச் சிறப்பித்தார். விழா சிறப்புரையில் தமிழகத்தின் ஆட்சிமொழித் தமிழ், அரசின் அலுவலக மொழித் தமிழ் தமிழிலேயே எழுதுங்கள் என்று தமிழுக்கும், தமிழ் மொழிக்கும் சொந்தகாரர்களிடத்திலும் தமிழ் மொழி பேசுபவர்களிடத்திலும் தான் தமிழில் எழுதுங்கள் என்று கேட்கிறோம் எனக் கூறினார். மேலும், இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு பள்ளிக்கல்வித்துறைக்கு மட்டுமே 5 இல் 1 பங்கு நிதி ஒதுக்கீடு செய்து கல்வியில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சாதனை செய்துள்ளார்கள் என்றும் கூறினார். தமிழ் வளர்ச்சித் துறைக்கு தன்னை அமைச்சராக நியமித்ததற்கு பெருமை அடைவதாகவும் அதற்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் கூறினார். அகிலமே வியக்கும் வண்ணம் அமெரிக்க சுதந்திர தேவி சிலையைப் போன்று மதுரையில் தமிழ்த்தாய் சிலை அமைப்பதற்கு 100 கோடி ரூபாய் ஒதுக்கி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இது உலகெல்லாம் உள்ள தமிழர்களின் உள்ளத்தில் பெருமகிழ்ச்சியாக விளங்கிக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழ் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டி 200 கோடி ரூபாய் நிதி அளித்துள்ளார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தமிழ்ப் பல்கலைக் கழகம், உலகத் தமிழ்ச்சங்கம் ஆகியவற்றின் பணிகளை செம்மைப்படுத்தி மேம்படுத்தும் வண்ணம் திட்டங்களைத் தீட்டி பல கோடிகளை

தந்துள்ளார் என்றும் தெரிவித்தார். தமிழ்நாடு அரசு அலுவலர்கள், பணியாளர்கள் அலுவலகங்களில் முழுமையாகத் தமிழிலேயே எழுதப்பட வேண்டுமென்பதற்காகவே இந்தக் கருத்தரங்கம் நடத்தப்படுகிறதென்றும் தெரிவித்தார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்கும் திட்டங்களுக்கு உறுதுணையாக இருந்து பொதுமக்களை சென்றடையும் வண்ணம் பாடுபட வேண்டுமென்றும் கூறினார். நிறைவாக திருப்பூர் மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் திரு.வெ.குமார் அவர்கள் நன்றியுரையும் ஆற்றினார்கள்.

2011 ஆம் ஆண்டிற்கான சிறந்த வரைவுகள், குறிப்புகள் எழுதியமைக்காக மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் முனைவர் வைகைச் செல்வன் அவர்களிடம் பரிசு பெற்றவர்கள் விவரம்

1. **மாவட்ட நிலை அலுவலகங்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு தி. சுந்தரராசன்<br>கண்காணிப்பாளர்<br>மாவட்ட நில அளவை அலுவலகம்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்<br>சென்னை – 600 001. | முதல் பரிசு | 3,000/– |
| 2 | திரு இரா. சங்கர்<br>உதவியாளர்<br>மாவட்டப் பதிவாளர் அலுவலகம்<br>(மத்திய சென்னை)<br>இராயப்பேட்டை<br>சென்னை – 600 014. | இரண்டாம் பரிசு | 2,000/– |

2. **சார்நிலை அலுவலகம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | திருமதி இராஜம்மாள்<br>உதவியாளர்<br>துணை ஆணையர் அலுவலகம்<br>இந்து சமய அறநிலையத்துறை<br>அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயில்<br>திருவல்லிக்கேணி<br>சென்னை – 600 005. | முதல் பரிசு | 3,000/– |
| 2 | திரு அ. சுகவனம்<br>பதிவறை எழுத்தர்<br>சார்பதிவாளர் அலுவலகம்<br>பெரியமேடு சார்பதிவகம்<br>சென்னை – 600 003. | இரண்டாம் பரிசு | 2,000/– |

3. 2011 ஆம் ஆண்டில் சென்னை மாவட்டத்தில் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தில் சிறந்து விளங்கியமைக்காக சென்னை, எழும்பூர், ''மாவட்டக் கல்வி அலுவலகம்'' (வடக்கு) அலுவலகத்திற்கு பாராட்டுச் சான்றிதழும் கேடயமும் வழங்கப்பட்டது.

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9